# கல்வி

**1. சென்னைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வகங்கள் மேம்படுத்துதல்.**

இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப, "பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்பதற்கு ஏற்ப பள்ளிகளில் ஆய்வகங்களின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தப்பட வேண்டும். இது மாணவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

**அறிவிப்பு: அனைத்து சென்னை உயர் / மேல்நிலைப் பள்ளிகளிலும் செய்முறை வகுப்புகளைச் சிறப்பான முறையில் நடத்திட ஆய்வகங்களின் உட்கட்டமைப்புகள் படிப்படியாக மேம்படுத்தப்படும். முதற்கட்டமாக, 2023-2024-ஆம் கல்வியாண்டில் முன்னுரிமையின் அடிப்படையில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் 10 மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள ஆய்வகங்கள் மேம்படுத்தப்படும்.**

**2. சென்னைப் பள்ளிகளுக்கு Public Address System (PAS) வழங்குதல்.**

பெருநகர சென்னைப் பள்ளிகள் தனியார் பள்ளிகளுக்கும் மேலாக, போட்டிபோட்டுக் கொண்டு முன்னிலை வகிக்க, சென்னை மாநகராட்சியின் அனைத்து பள்ளிகளிலும் **Public Address System (PAS)** அமைப்பதன் மூலம், பள்ளியின் நலன் சார்ந்த அறிவிப்புகளை, தலைமையாசிரியர் ஒரே நேரத்தில் அனைத்து மாணவர்களுக்கும் தெரியப்படுத்துவதற்காக **Public Address System (PAS)** உதவியாக அமையும்.

**அறிவிப்பு: பெருநகர சென்னைப் பள்ளிகளில், தலைமை ஆசிரியர்கள் முக்கியமான அறிவிப்புகளை அறிவிக்கவும், பள்ளியின் அனைத்து பகுதிகளையும் உடனடியாக தொடர்பு கொள்வதற்கு வசதியாக சென்னை மாநகராட்சியின் அனைத்து பள்ளிகளிலும் ஒவ்வொரு தளத்திலும் Public Address System அமைத்து தரப்படும். முதற்கட்டமாக, வரும் கல்வியாண்டு 2023-24-ல் உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் ரூ.35 இலட்சம் செலவில் 70 Public Address System அமைத்து தரப்படும். இத்திட்டம் படிப்படியாக அனைத்து பள்ளிகளிலும் செயல்படுத்தப்படும்.**

**3. பெருநகர சென்னைப் பள்ளி மாணவர்களுக்கு உறுதுணையாக ஆலோசகர்கள் பணியமர்த்துதல்.**

வளர் இளம் பருவமானது (Adolescent Stage) பள்ளிப் பருவத்தில் மிக முக்கியமான, ஒரு புரியாத புதிரான பருவமாகும். இந்தப் பருவத்தில் உடலும், உள்ளமும் திடமாக இருப்பது கற்றலுக்கு அடித்தளம் அமைப்பது போன்றது. உடல் மாற்றமும் இயற்கையானதே! இத்தருணத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் ஐயங்களுக்கு ஆலோசகரின் ஆலோசனைகள் பள்ளி மாணவர்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

**அறிவிப்பு: வளர் இளம் பருவத்தில் (Adolescent Stage) மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுவதன் மூலமே, மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த முடியும். எனவே பிரச்சனைகளுக்கான தீர்வு தேவைப்படும் பள்ளிகளில், மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்க அனைத்து மண்டலங்களிலும் ஆலோசகர்கள் (Counsellors) ஒரு கல்வியாண்டிற்கு ரூ.30 இலட்சம் செலவில் பணியமர்த்தப்படுவார்கள்.**

**4. பெருநகர சென்னைப் பள்ளி மேல்தளங்களின் பாதிப்புகளை மறுசீரமைத்தல் மற்றும் அனைத்து விதமான பராமரிப்பு பணிகள்.**

பெருநகர சென்னைப் பள்ளிகளின் மேற்தளங்களில் ஏற்படும் பழுது மற்றும் தண்ணீர் கசிவால் பள்ளிகளின் உட்கட்டமைப்பு மற்றும் கற்றல் செயல்பாடுகள் பாதிப்படைகிறது. எனவே, கற்றல் செயல் திறன் சிறிதும் பாதிக்கப்படாத அளவில் இருக்க, பள்ளிகளின் மேற்தளங்களை மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும். 2022-2023-ஆம் நிதியாண்டில் பள்ளிகளின் பராமரிப்பு செலவினத்திற்காக ரூ.16 கோடி ஒதுக்கப்பட்டது.

**அறிவிப்பு (அ) : பழுது ஏற்பட்டிருக்கும் பள்ளிக் கட்டடங்களின் மேற்தளங்களை முன்னுரிமையின் அடிப்படையில், Epoxy Water Proofing என்ற தொழில்நுட்பத்தின் மூலம், மறுசீரமைப்பது (Retrofitting of roofs) மற்றும் பள்ளிக் கட்டடங்களின் அனைத்து விதமான பராமரிப்பு பணிகளுக்காக 2023-2024 கல்வியாண்டில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**அறிவிப்பு (ஆ) : அரசாணை(நிலை)எண். 48, பள்ளிக் கல்வி (ப.க.5(2)) துறை, நாள்: 01.03.2023-ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள 90 தொடக்கப்பள்ளிகள், 38 நடுநிலைப்பள்ளிகள், 8 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 3 மேல்நிலைப்பள்ளிகள் உட்பட 139 பள்ளிகளுக்கு 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.15 கோடி செலவில் அனைத்து விதமான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், இப்பள்ளிகளில் தூய்மைப் பணியை மேற்கொள்ள NULM திட்ட பணியாளர்கள் மூலம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**மேற்கண்ட "அ" மற்றும் "ஆ" அறிவிப்புகளுக்கு 2023-2024-ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.45 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.**

**5. சென்னைப் பள்ளிகளுக்கு இசைக்கருவிகள் வழங்கப்படும்.**

கலைத்திருவிழா போன்ற இசைப் போட்டிகளில் பரிசுகளை வென்று முன்னிலையில் இருக்கும் சென்னை மாநகராட்சியின் பள்ளிகளை, மேலும் ஊக்கப்படுத்தும் விதமாக, இசை ஆசிரியர்கள் உள்ள பள்ளிகளுக்கு இசைக்கருவிகள் வழங்கப்படும்.

**அறிவிப்பு: சென்னைப் பள்ளிகளில் இசை ஆசிரியர்கள் உள்ள 20 பள்ளிகளுக்கு ஸ்ருதி பெட்டி (Manual), மின்கலன்களால் இயக்கப்படும் ஸ்ருதி பெட்டி (Electronic), ஆர்மோனியம், தாளம் மற்றும் மராக்கஸ் குச்சிகள் Maracas போன்ற இசைக்கருவிகள் ஒரு பள்ளிக்கு ரூ.25,000/- வீதம் 20 பள்ளிகளுக்கு ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**6. சென்னைப் பள்ளிகளில் தானியங்கி மணி அமைத்தல்.**

'காலம் பொன் போன்றது', 'கடமை கண் போன்றது' கற்றல் கற்பித்தலில் முழுமையாக ஈடுபட தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், கடைநிலை ஊழியர் வரை அனைவருக்கும் அவசியமானது **தானியங்கி மணி.**

**அறிவிப்பு: அனைத்து சென்னை மாநகராட்சி பள்ளிகளிலும் தானியங்கி மணி ரூ.27.17 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்து தரப்படும்.**

**7. பள்ளிகளில் மாதிரி ஐக்கிய நாடு (MUN) குழு அமைக்கப்படும்.**

இன்றைய மாணவர்கள் நாளைய நாட்டை வழி நடத்திச் செல்லும் பெரும் பொறுப்பைக் கொண்டவர்கள். நமது நாட்டின் பாராளுமன்ற நடைமுறைகளையும், பன்னாட்டுக்கலை, கலாச்சாரம் கல்வி முறைகளை தெரியப்படுத்துதல் மாணவர்களுக்கு அவசியமாகும்.

**அறிவிப்பு: சென்னை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களிடையே கற்றல்/கற்பித்தல் செயல்முறைகள் மட்டுமின்றி நமது நாட்டின் பாராளுமன்ற நடைமுறைகளை அறிவதோடு, பிற நாடுகளின் பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் சவால்களை எதிர் கொள்ளவும், தீர்வுகளைக் கண்டறியவும், பன்னாட்டு கலாச்சாரங்கள், கல்விமுறை, சுற்றுச்சூழல் ஆகியவற்றைப் பற்றி நமது மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு பள்ளிகளில் மாதிரி ஐக்கிய நாடு (MUN) குழு அமைக்கப்படும்.**

**8. மாலை நேர சிறப்பு வகுப்பு பயிலும் சென்னை மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு மாலை சிறுதீனி வழங்குதல்.**

மாணவர்களின் தேர்ச்சி விழுக்காட்டை உயர்த்துவதற்கு, உயர் / மேல்நிலை பள்ளி மாணவர்களுக்கு மாலை நேர சிறப்பு வகுப்பு மற்றும் குறைதீர் கற்பித்தல் வகுப்பில், மாணவர்கள் களைப்பின்றி புத்துணர்ச்சியுடன் கல்வி கற்க ஏதுவாக மாலையில் சிறுதீனி வழங்குதல்.

**அறிவிப்பு: மாலை நேர சிறப்பு வகுப்பு மற்றும் குறைதீர் கற்பித்தல் வகுப்பில் (Remedial Class) பங்கேற்கும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு, 2023-2024-ஆம் கல்வியாண்டில் ஜனவரி மாதம் முதல் தேர்வு முடியும் (ஏப்ரல் மாதம்) வரை மாலையில் சிறுதீனி (அவித்த சுண்டல் அல்லது பயிறு வகைகள்) ரூ.100 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

**9. திருக்குறளுடன் அதன் விளக்கமும் கூற வைத்து சென்னை மாநகராட்சி பள்ளிகளில் தமிழ் மொழிப் பயிற்சி அளித்தல்.**

சொல்ல வந்த கருத்தைத் திறம்பட எடுத்துரைக்க வேண்டும். இதற்கான கருவி மொழியாகும்: செம்மொழியாம் தமிழ் மொழி உலகில் உயர்ந்திட, மாணவச் செல்வங்களுக்கு மொழிப் பயிற்சி அளித்தல் இன்றியமையாதது.

**அறிவிப்பு: திருக்குறளுடன் அதற்கான விளக்கமும் நாள்தோறும் காலை இறைவணக்கக் கூட்டத்தில் மாணவர்களை கூறவைத்து தமிழ் பேசும் திறனை மேம்படுத்த 2023-2024-ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.**

**10. சென்னை மாநகராட்சி பள்ளியில் பயிலும் மாணவர்களின் ஆங்கிலம் பேசும் திறனை மேம்படுத்துதல்.**

தமிழ் மக்கள் உலகின் எந்தப்பகுதிக்குச் சென்றாலும், சிரமமின்றி தன் நிலையில் சிறந்து விளங்கிட, நம் தாய்மொழியாம் தமிழுக்கு அடுத்தபடியாக நமக்கு உறுதுணையாக இருப்பது ஆங்கிலம் பேசும் திறனாகும்.

**அறிவிப்பு: ஒவ்வொரு புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் காலை இறைவணக்கக் கூட்டத்தை ஆங்கிலத்தில் நிகழ்த்த அனைத்து மாணவர்களுக்கும் சுழற்சி முறையில் வாய்ப்பினை வழங்கி மாணவர்கள் ஆங்கிலத்தில் பேசும் புலமையை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், தலைமை பண்பையும் உயர்த்த வழிவகை செய்யப்படும். மேலும், ஆங்கிலப் பாட வேளையில், கற்பிக்கும் ஆசிரியர்கள் குறைந்தபட்சம் இரண்டு மாணவர்களை ஏதேனும் பொது தலைப்பில் 2 நிமிடங்கள் ஆங்கிலத்தில் பேச வைப்பதை நடைமுறைப்படுத்தி சுழற்சி முறையில் ஆங்கிலத்தில் பேசும் புலமையை உயர்த்த வழிவகை செய்யப்படும்.**

**11. சென்னைப் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்புகள் நிறுவப்படும்.**

தற்போதைய நவீன உலகில் கற்றல், கற்பித்தல் நிகழ்வுகளில் இணையதளம் மற்றும் கணினியின் பயன்பாடு மிகவும் இன்றியமையாததாகும், எனவே நமது சென்னைப் பள்ளிகளில் இணையதள வசதியுடன் ஸ்மார்ட் வகுப்பறைகள் ஏற்படுத்தி தருவது அவசியமாகிறது.

**அறிவிப்பு: சென்னை மாநகராட்சி பள்ளிகளில் நமக்கு நாமே திட்டத்தின் (Namakku Naame Thittam) கீழ் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் பொதுமக்களின் பங்களிப்புடன் இணையதள வசதியுடன் ஸ்மார்ட் வகுப்புகள், தேவைப்படும் பள்ளிகளில் அமைக்கப்படும்.**

**12. ஆசிரியர்கள் விரும்பும் Massive Open Online Course (MOOC) பயில்வதற்கான ஊக்கத் தொகை வழங்கப்படும்.**

ஆசிரியர்கள் விரும்பும் 100% தேர்ச்சி விழுக்காட்டிற்கு, பெருநகர சென்னை மாநகராட்சியின் பங்கு மேலும் உயர்த்தப்படுகிறது. இது கற்பிக்கும் ஆசிரியர்களை ஊக்கப்படுத்துவதாகும். மேலும் ஆசிரியர் தொழிலில், தொழில் ரீதியாக, இணையதளம் வழியாகத் தங்கள் கல்வித்தகுதியை உயர்த்திக் கொள்ள வழங்கும் கல்வி உதவித் தொகை, மாணவர்கள் கற்றல் முன்னேற்றத்துக்கு உதவியாக இருக்கும்.

**அறிவிப்பு (அ) : ஆசிரியர் தொழில் மேம்பாடு : 10 மற்றும் 12-ஆம் வகுப்புகளில் 100% தேர்ச்சி ஏற்படுத்தும் ஆசிரியர்களுக்கு, இதுவரை ரூ.1,500/- ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வந்தது. 2023-2024-ஆம் கல்வியாண்டில் ஊக்கத்தொகை ரூ.3,000/-ஆக உயர்த்தி வழங்கப்படும். அதிகபட்சம் 400 ஆசிரியர்களுக்கு ரூ.12 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.**

**அறிவிப்பு (ஆ) : மேலும், கூடுதலாக ஆசிரியர்கள் விரும்பும் எந்த Massive Open Online Course (MOOC)-ஐப் பெறுவதற்கும் உதவித் தொகை வழங்கப்படும். இதற்காக ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**13. சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி ஏற்படுத்திய ஆசிரியர்களை, கல்விச்சுற்றுலா அழைத்துச் செல்லுதல்.**

சென்னைப் பள்ளிகளில், 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி ஏற்படுத்தும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் விதமாக கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லுதல்.

**அறிவிப்பு: 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி ஏற்படுத்திய ஆசிரியர்களை விடுமுறை நாட்களில், கல்விச் சுற்றுலாவாக நாட்டின் முதன்மையான கல்வி நிறுவனங்களுக்கு (எ.கா: ஐஐடி-மெட்ராஸ், ஐஐஎம்-பெங்களூர், டெல்லி பல்கலைக் கழகம்) அழைத்துச் செல்லப்படுவர். இதற்காக ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**14. பன்னிரண்டாம் வகுப்பில் 100 சதவீதம் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் ரொக்கப் பரிசினை உயர்த்தி வழங்குதல்.**

12ஆம் வகுப்பில் அரசுப் பொதுத் தேர்வில் ஒரு பாடத்தில் 100 / 100 முழு மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு ரூ.1,000/- வழங்குவதை ரூ.10,000/-ஆக உயர்த்திக் கொடுப்பதால் மாணவர்களின் கல்லூரி / உயர்கல்விக்கு உதவியாக இருக்கும்.

**அறிவிப்பு: 2023-2024ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் ஏதேனும் ஒரு பாடத்தில் 100/100 மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு, தலா ரூ.10,000/- வீதம் ரொக்கப் பரிசு வழங்கப்படும். இத்திட்டம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இது தொடர்பாக தனியே வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்படும்.**

**15. JEE, CLAT மற்றும் NEET பயிலும் மாணவர்களுக்கு முதலாம் ஆண்டுக் கல்வித் தொகை வழங்குதல்.**

**JEE, CLAT மற்றும் NEET** போன்ற போட்டித் தேர்வுகளில் தகுதி பெற்று, அதன் மூலம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனங்களில் (எ.கா. IIT, National Law School of India University – Bangalore, AIIMS and MMC) சேரும் மாணவர்களுக்கு பொருளாதார தடங்கல்கள் சிறிதும் ஏற்படாமல் இருக்க, பெருநகர சென்னை மாநகராட்சியே அவர்களுடைய **முதலாம் ஆண்டுக் கல்விக் கட்டணத்தை** முழுவதுமாக கொடுப்பதால் மாணவர்கள் சிரமமின்றிக் கல்வி கற்பதற்கு பேருதவியாக அமையும்.

**அறிவிப்பு: சென்னைப் பள்ளிகளில் பயின்று மேல்நிலை கல்வியில் தேர்ச்சி பெற்று Joint Entrance Exam (JEE), Common Law Admission Test (CLAT) மற்றும் National Eligibility cum Entrance Test (NEET) போன்ற தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று, அதன் மூலம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அரசு கல்வி நிறுவனங்களில் மட்டும் (எ.கா. IIT, National Law School of India University – Bangalore, AIIMS and MMC) சேரும் மாணவர்களுக்கு அவர்களின் முதலாம் ஆண்டு கல்விக் கட்டணம் (Tuition Fee) மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சியால் 2023-2024ஆம் நிதியாண்டு முதல் வழங்கப்படும். இது தொடர்பாக தனியே வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்படும்.**

**16. பள்ளிகளுக்கு முதலுதவி பெட்டிகள் வழங்கப்படும்.**

சென்னைப் பள்ளிகளில் மாணவர்கள் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடும் போது முன்னெச்சரிக்கை நடவடிக்கையை கருத்தில் கொண்டு, அனைத்துப் பள்ளிகளுக்கும் முதலுதவிப் பெட்டி வழங்குவது அவசியமாகும்.

**அறிவிப்பு : அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அனைத்துப் சென்னைப் பள்ளிகளுக்கும் ரூ.6.27 இலட்சம் செலவில் முதலுதவி பெட்டிகள் வழங்கப்படும்**.

**17. அறிவியல் ஆய்வகம் மற்றும் கணினி ஆய்வகங்களுக்கு தீயணைப்பான் வசதி ஏற்படுத்துதல்.**

சென்னைப் பள்ளிகளில் உள்ள அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் கணினி ஆய்வகங்களில் தீயணைப்பான் கருவி (Fire Extinguisher) அமைப்பது மாணவர்களின் பாதுகாப்பிற்கு மிகவும் அவசியமானதாகும்.

**அறிவிப்பு : 2023-2024ஆம் கல்வியாண்டில் சென்னை மாநகர பள்ளிகளில் உள்ள அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் கணினி ஆய்வகங்களில் ரூ.5 இலட்சம் செலவில் தீயணைப்பான் கருவிகள் (Fire Extinguisher) பொருத்தப்படும்.**

**18. பெற்றோர்களுக்கு சிறப்பு வழிகாட்டுதல் நிகழ்ச்சி ஆண்டுதோறும் நடத்தப்படும்.**

பெருநகர சென்னை மாநகர பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு கல்வி தொடர்பான வழிகாட்டுதல் இன்றியமையாதது. School Management Committee (SMC) கூட்டங்கள் தற்பொழுது மாதத்திற்கு ஒருமுறை நடைபெறுகிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்கால முன்னேற்றத்தை அறிந்து கொள்ளவும், அதற்கேற்ப வழிநடத்துவதற்கும், விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாகும், எனவே, SMC கூட்டம் நடைபெறும் போது ஏதேனும் ஒரு கூட்டத்தில் சிறப்பு வழிகாட்டுதல் நிகழ்ச்சியையும் இணைத்து நடத்தினால் கல்வி மற்றும் சமுதாய முன்னேற்றத்துக்கு வழிவகை செய்யும் விதமாக அமையும்.

**அறிவிப்பு: பள்ளிகளில் பெற்றோர்களுக்கான நோக்குநிலைத் (orientation) திட்டம், தற்சமயம், School Management Committee (SMC) கூட்டங்களின் போது (மாதத்திற்கு ஒருமுறை) பெற்றோர்கள் பள்ளிகளுக்கு அழைக்கப்பட்டு, மாணவர்களின் கற்றல் நிலை மற்றும் பள்ளிகளின் கல்வி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை குறித்து எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. 2023-2024ஆம் கல்வியாண்டில், ஆண்டுக்கு ஒருமுறை கல்வி மேம்பாடு குறித்த சிறப்பு வழிகாட்டுதல் நிகழ்ச்சியையும், SMC கூட்டத்தின் போது இணைத்து செயல்படுத்தப்படும்.**

**19. பள்ளிகளில் மகிழ்ச்சியான வகுப்பு (Happy Class) நடத்துதல் :**

சென்னை பள்ளிகளில் கல்வி கற்க, பல்வேறு சூழ்நிலையிலிருந்து வரும் அனைத்து மாணவர்களும், அன்றைய நாள் தொடக்கத்தை மனமகிழ்வுடன் தொடங்கினால், அந்த நாள் முழுவதும் கற்றல் நிகழ்வுகள் இனிதாக அமையும். ஒவ்வொரு நாளும், முதல் பாடவேளையில் 10 நிமிடங்கள், நன்னெறிப்பண்பு, மனிதநேயம், அன்பு செலுத்துதல் போன்ற நற்பண்புகளை வளர்க்கும் பாட நேரமாக மாற்றப்படும்.

**அறிவிப்பு: சென்னை பள்ளிகளில், மாணவர்கள் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கு வரவும், நாள் முழுவதும் மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கவும், முதல் பாட வேலையின் போது 10 நிமிடம் தினமும் மகிழ்ச்சியான வகுப்புகள் (Happy Class) நடத்தப்படும். இவ்வகுப்பில் மாணவர்களுக்கு நன்நெறிப்பண்புகள் கற்பிக்கப்படும். இது சென்னை மாநகரப் பள்ளி மாணவர்களை நல்லொழுக்கம் மற்றும் படிப்பிலும் சிறந்து விளங்க உதவும்.**

**20. சென்னை மாநகரப் பள்ளிகளின் முகப்பில் சென்னைப் பள்ளிகளுக்கான சின்னம் (Logo) அமைப்பது :**

தற்போது தனியார் பள்ளிகளுக்கும் இணையாக போட்டி போட்டுக் கொண்டு தரமான கல்வியை வழங்குவதில் சென்னை மாநகரப் பள்ளிகள் முன்னேறி வருகின்றன. சென்னைப் பள்ளிகளின் தனித்துவத்தை உணர்த்தும் வகையில், சென்னைப் பள்ளிகளுக்கான Logo (சின்னம்) அறிமுகப்படுத்தப்படும்.

**அறிவிப்பு: பள்ளி செல்லும் மாணவர்களையும், பொதுமக்களையும் ஈர்க்கும் வகையில், 2023–2024ஆம் கல்வியாண்டில் அனைத்து சென்னை மாநகரப் பள்ளிகளின் முகப்பிலும் தனித்துவம் வாய்ந்த சென்னைப் பள்ளிகளுக்கான சின்னம் (Logo) அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். மேலும், பள்ளிகளில் பயன்படுத்தப்படும் செய்முறை பயிற்சி ஏடுகள், பதிவேடுகள், சான்றிதழ்கள், அறிக்கை அட்டைகள் போன்றவற்றில் சென்னைப் பள்ளிகளுக்கான சின்னம் (Logo) பதிக்கப்படும்.**

**21. சென்னை மாநகரப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை நான்கு குழுக்களாக பிரித்து நான்கு வண்ண T.Shirt வழங்குதல்.**

சென்னைப் பள்ளிகளில் உள்ள மாணவர்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு குழுக்களாகப் பிரிக்கப்படுவர். ஒவ்வொரு குழுவிற்கும் முறையே அரக்கு, பச்சை, மஞ்சள், ஊதா ஆகிய வண்ணங்களில் T.Shirt வழங்கப்படும். இக்குழு, பள்ளி மாணவர்களின் தனித்திறன்களை ஊக்குவிக்கும் விதமாக அமையும்.

**அறிவிப்பு:சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9, 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் அனைவரையும் நான்கு குழுக்களாக அமைத்து அக்குழுக்களுக்கு அரக்கு, பச்சை, மஞ்சள், ஊதா ஆகிய நான்கு வண்ணங்களில் 28,200 மாணவர்களுக்கு ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் T.Shirt வழங்கப்படும்.**

**22. சென்னைப் பள்ளிகளில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்:**

சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு கல்வி கற்பிப்பதுடன் அவர்களின் ஆரோக்கியத்தை பேணுதல் மிகவும் அவசியமானதாகும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பள்ளிகளில் மருத்துவ முகாம் அமைத்து ஒவ்வொரு மாணவனையும் பரிசோதனை செய்து அதன் விவரங்களை மருத்துவ அட்டையில் (Health Card) பதிவு செய்து உடல் ஆரோக்கியத்தினை பேணிக்காத்து அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

**அறிவிப்பு:சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் உடல் ஆரோக்கியத்தினை கருத்தில் கொண்டு தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு வருடத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மருத்துவ முகாம் நடத்தப்படும். இம்மருத்துவ முகாமில் அனைத்து மாணவர்களும் ஆண்டுக்கு ஒரு முறை பயனடையுமாறு செயல் படுத்தப்படும், இதனால் மாணவர்களின் உடல் நலத்தை பேணிக்காப்பதால் அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த வழிவகை செய்யப்படும்.**

**23. கல்விச் சுற்றுலாவாக தொழிற்சாலைகளை பார்வையிட அழைத்துச் செல்லுதல்:**

சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் கல்வி கற்பிப்பதுடன் பள்ளிப் படிப்பின் போதே கல்விச் சுற்றுலாவாக தொழிற்சாலைகளை பார்வையிடுவது அவர்களின் உலகளாவிய அறிவை மேம்படுத்துவதாகும்.

**அறிவிப்பு : 2023-2024ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் பள்ளி கல்விக்குப் பின் அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டும் நிகழ்வாக தொழிற்சாலைகளை பார்வையிடுவதற்கு ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள**

**24. சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு Career Guidance Programme வழங்கப்படும்:**

சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு எதிர்கால கல்வி மற்றும் வேலை வாய்ப்பிற்கான வழிகாட்டுதல் வழங்குவதற்காக துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் சிறந்து விளங்கும் முன்னாள் மாணவர்களின் வாயிலாக வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடத்தப்படும்.

**அறிவிப்பு : சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் பள்ளிப் படிப்பிற்குப்பின் அவர்களின் எதிர்கால கல்வி மற்றும் வேலைவாய்ப்பினை பற்றி அறிந்து முன்னேற்றப்பாதையில் செல்வதற்கு வழிகாட்டும் விதமாக அது தொடர்பான துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் சிறந்து விளங்கும் முன்னாள் மாணவர்களின் வாயிலாக வழிகாட்டுதல் நிகழ்ச்சி (Career Guidance Programme) நடத்தப்படும்.**

**25. "நான் முதல்வன்" என்ற திட்டத்தின் கீழ் கற்றல் பயிற்சி வழங்குதல் :**

கற்றலில் பின்தங்கியுள்ள மாணவர்கள் Tuition சென்று பயிலாமல் அவர்களுக்கு, கற்பித்தலில் சிறந்து விளங்கும் ஆசிரியர்கள் வழியாக பயிற்சி வழங்குவதன் மூலம் மாணவர்கள் கற்றலில் சிறந்து விளங்க உதவியாக இருக்கும்.

**அறிவிப்பு : சென்னைப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களில் கற்றலில் பின் தங்கியுள்ள மாணவர்கள் Tuition செல்லாமல் அவர்களுக்கு, புகழ் பெற்ற ஆசிரியர்கள் மூலம் இணையதளம் வழியாக நான் முதல்வன் என்ற திட்டத்தின் கீழ் கற்றல் பயிற்சி வழங்கப்படும்.**

**26. நேரடியாகவும் மற்றும் இணையதளம் வழியாகவும் போட்டித் தேர்வுகளில் வெற்றிப் பெற பயிற்சி வழங்குதல் :**

சென்னை மாநகர பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மிகச்சிறந்த மாணவர்களை பொதுவான தேர்வின் மூலம் தேர்ந்தெடுத்து, போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு வெற்றி பெறும் வகையில், நேரடியாகவும் மற்றும் இணையதளம் வாயிலாகவும், பயிற்சிகள் வழங்குவது மாணவர்களின் முன்னேற்றத்திற்கு அவசியமாகிறது.

**அறிவிப்பு:சென்னைப் பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களை பொதுவான தேர்வின் மூலம், தேர்ந்தெடுத்து போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு வெற்றி பெறும் வகையில் நேரடியாகவும் மற்றும் இணையதளம் வாயிலாகவும் பயிற்சிகள் வழங்கப்படும்.**

**27. சென்னைப் பள்ளிகளில் ஆண்டு தோறும் ஆண்டு விழா நடத்தப்படும் :**

அனைத்துச் சென்னை மாநகரப் பள்ளிகளிலும், பள்ளி மாணவர்களின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, ஆண்டு தோறும், ஆண்டு விழா நடத்தப்படும். இந்நிகழ்விற்கு பாராளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு மேயர், மரியாதைக்குரிய துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டு மாணவர்களின் முன்னேற்றத்தையும், பள்ளியின் செயல்பாடுகளையும் அறிந்து, மேலும் முன்னேற்றம் அடைய ஊக்குவிப்பர்.

**அறிவிப்பு:சென்னை தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களால், திட்டமிட்டு ஒவ்வொரு ஆண்டும் ஆண்டு விழா நடத்தப்படும். இவ்வாண்டு விழாவில் பாராளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு மேயர், மரியாதைக்குரிய துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டு மாணவர்களின் முன்னேற்றத்தையும், பள்ளியின் செயல் பாடுகளையும் சிறப்பித்து, பள்ளியின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கு வழிகாட்டுவார்கள்.**

## பொது சுகாதாரம்

**28. தற்காலிக NULM பணியாளர்களுக்கு மழைக்கவச உடை (Raincoat) போன்ற நலப்பொருட்கள் வழங்குவது.**

சுகாதாரத் துறையின் பணிகளை மேற்கொள்வதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் 3,312 பணியாளர்கள் உள்ளனர். அவர்களில் 950 பேர் நிரந்தரப் பணியாளர்கள், 2,362 பேர் சுய உதவிக் குழுக்கள் (NULM) மூலம் தற்காலிகமாக பணியமர்த்தப் பட்டவர்கள். நிரந்தரப் பணியாளர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் நலப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், தற்காலிக (NULM) பணியாளர்களுக்கு அத்தகைய நலப்பொருட்கள் வழங்கப்படுவதில்லை. இந்த தற்காலிக தொழிலாளர்கள் மழை மற்றும் பிற இயற்கை பேரிடர் காலங்களில் நிரந்தர தொழிலாளர்களுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு மழைக்கவச உடை (Raincoat) மற்றும் நலபொருட்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

**அறிவிப்பு: சுகாதாரத் துறையின் கீழ் பணிபுரியும் NULM தற்காலிக தொழிலாளர்களுக்கு நலப்பொருட்களும், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மழைக்கவச உடை (Raincoat) மற்றும் பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கப்படும். இதற்காக ரூ.18.75 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**29. மருத்துவ முகாம்கள் நடத்துவதற்கான கூடாரங்கள் (Tents), மேஜை, நாற்காலிகள் வழங்குவது.**

பொது சுகாதாரத் துறையின் மூலம் பல்வேறு இடங்களில் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் பாதித்த இடங்களில் மருத்துவ முகாம்களை நடத்துவதற்கு, கூடாரங்கள், மேஜை நாற்காலிகளை வாடகைக்கு எடுக்க வேண்டியுள்ளது. கடந்த ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியால், 7,648 மருத்துவ முகாம்களை நடத்தப்பட்டுள்ளது. மேலும், இம்மருத்துவ முகாம்களை சிறப்புற நடத்துவதற்கு ஒவ்வொரு கோட்டத்திற்கும், கூடாரம் மற்றும் மேஜை நாற்காலிகளின் தேவை அத்தியாவசியமாகிறது.

**அறிவிப்பு: சுகாதாரத் துறையின் கீழ் நடத்தப்படும் மருத்துவ முகாம்களுக்கு அனைத்து கோட்டங்களுக்கும் கூடாரம், மேஜை மற்றும் நாற்காலி வாடகை முறையில் அமர்த்தி கொள்ள ரூ.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மண்டலம் வாரியாக தேவையின்படி பகிர்ந்து அளிக்கப்படும்.**

**30. அனைத்து மலேரியா பணியாளர்களுக்கு Vector Control Kit வழங்குவது.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொசுத்தொல்லையை ஒழிப்பதற்காக 2,500 மலேரியா பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இப்பணியாளர்கள், வீடுவீடாக சென்று கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து, கொசுக்கொல்லி மருந்துகளை தெளித்து கொசுவை கட்டுப்படுத்துகின்றனர். மேலும், டெங்கு, மலேரியா போன்ற காய்ச்சல் கண்டறியப்பட்டவர்களின் விவரங்களை சேகரித்து, சுகாதாரம் குறித்த அறிவுரைகளை வழங்கி வருகின்றனர். இவர்கள், Temephos, Mosquito Larvicide Oil, Torch Light, பதிவேடுகள், விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கான பொருட்கள் (IEC materials) ஆகியவைகளை கொண்டு, வீடுவீடாக சென்று கொசு ஒழிப்பு பணியினை மேற்கொண்டு வருகின்றனர். இப்பணியாளர்கள் எடுத்துச் செல்லும் பொருட்களை கொசு ஒழிப்புக்காக ஒரே சீராகப் பராமரிக்க, கொசுப்புழு தடுப்புப் பணிகளை மேற்கொள்ளும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும், தரமான Vector Control Kit வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அறிவிப்பு: கொசு ஒழிப்பு மற்றும் கொசுப்புழு தடுப்புப் பணிகளைச் செய்யும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும், ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் தரமான Vector Control Kit கொள்முதல் செய்து வழங்கப்படும்.**

**31. ஆறு நாய் பிடிக்கும் வாகனங்கள் மற்றும் ஐந்து மாடு பிடிக்கும் வாகனங்களை கொள்முதல் செய்தல்.**

i. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட எல்லை பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களை கட்டுப்படுத்துவதற்காக, 15 மண்டலங்களிலும் நாய் பிடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2022-2023-ஆம் ஆண்டில் 20,530 நாய்கள் பிடிக்கப்பட்டு, இனப்பெருக்க கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது, 16 நாய் பிடிக்கும் வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. இவற்றில் பெரும்பாலான வாகனங்கள் பழுதடைந்துள்ள காரணத்தினால், நாய் பிடிக்கும் பணியை சிறப்புடன் மேற்கொண்டு **"ரேபிஸ் நோய் இல்லா சென்னை மாநகரம்"** என்ற இலக்கை எட்டுவதற்கு புதியதாக 6 நாய் பிடிக்கும் வாகனங்கள் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.

ii. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளை பிடித்து, பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும், இரண்டு மாட்டுத் தொழுவங்களில் அடைக்கப்பட்டு வருகின்றன. 2022-2023-ஆம் நிதியாண்டில் சென்னையில் சுற்றித் திரிந்த மொத்தம் 7,199 மாடுகள் பிடிக்கப்பட்டு, ரூ.1.10 கோடி அபராத தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. தற்போது 15 மண்டலங்களிலும், 15 மாடு பிடிக்கும் வாகனங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலான வாகனங்கள் பழுதடைந்துள்ளதால், சுற்றித்திரியும் மாடுகளை பிடிக்கும் பணியினை தொய்வின்றி மேற்கொள்ள, 5 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளது.

**அறிவிப்பு: சென்னை மாநகரில் சுற்றித் திரியும் நாய்களை பிடிப்பதற்கு 6 புதிய வாகனங்கள், ரூ.60 இலட்சம் மதிப்பீட்டிலும், மாடுகளை பிடிப்பதற்கு 5 புதிய வாகனங்கள், ரூ.1.35 கோடி மதிப்பீட்டிலும் கொள்முதல் செய்யப்பட்டு உபயோகத்திற்கு கொண்டு வரப்படும்.**

**32. Communicable Disease Hospital, தண்டையார்பேட்டையில் மாநகர நோய் கண்காணிப்பு பிரிவு அமைத்தல்.**

நகரின் நோய் நிலையை மதிப்பிடுவதற்காக, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலிருந்து, பெருநகர சென்னை மாநகராட்சி அறிக்கைகளைப் பெற்று வருகிறது. இந்த அறிக்கைகளை பின்பற்றி நோய்க்கான காரணங்கள் ஆராயப்படுகின்றன. நோய் பரவல் மற்றும் தாக்கத்தை கட்டுப்படுத்த, நோய் தடுப்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறது. நோய் கண்காணிப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நோய் கண்காணிப்புக்காக, மாநகர நோய் கண்காணிப்பு பிரிவை, தண்டையார்பேட்டையில் உள்ள தொற்று நோய் மருத்துவமனையில் இந்த வசதி ஏற்படுத்தப்படும்.

**அறிவிப்பு: மக்களுக்கு ஏற்படும் நோய் நிலையை மதிப்பிடுவதற்காக தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனையில் (Communicable Disease Hospital) சென்னை மாநகரின் கண்காணிப்பு பிரிவு ஏற்படுத்தப்படும்.**

**33. பெருநகர சென்னை மாநகராட்சியில் குறைந்தபட்சம் 5 நகர்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கான (UPHC) தேசிய தரவுறுதி தரநிலைச் சான்றிதழ் National Quality Assurance Standards (NQAS) பெறுவது.**

சென்னையின் குடிமக்களுக்கு தரமான சுகாதார சேவைகளை வழங்க பெருநகர சென்னை மாநகராட்சி உறுதிப்படுத்தியுள்ளது. நகர்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கான (UPHC) மனிதவளம், உபகரணங்கள் மற்றும் நுகர்பொருட்களின் தேவை ஆகியவற்றின் அடிப்படையில், அதன் சுகாதார வசதிகளை வலுப்படுத்தி பெருநகர சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி Out Patient Department வருகை, ஒரு நாளைக்கு சராசரியாக 200 நபர்களாக அதிகரித்துள்ளது. சுகாதார மையங்களின் தரத்தை மேலும் வலுப்படுத்தவும், சான்றளிக்கவும், தர உறுதிச் சான்றிதழ்களைப் பெற உத்தேசிக்கப் பட்டுள்ளது. தரச்சான்றிதழ் பெறுவதற்கு உடனடியாக பணிகள் மேற்கொள்ளப்படும்.

**அறிவிப்பு: 2023-2024-ஆம் ஆண்டில், 5 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தர அங்கீகாரச் சான்றிதழ்கள், National Quality Assurance Standards (NQAS) என்ற நிறுவனத்திடமிருந்து பெற்று தரப்படும்.**

**34. ஆலந்தூர் மற்றும் ஷெனாய் நகரில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார மையங்களில் டயாலிசிஸ் மையங்கள் அமைப்பது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு மண்டலங்களில் 8 டயாலிசிஸ் மையங்கள் நிறுவப்பட்டு, 78 டயாலிசிஸ் இயந்திரங்களுடன் செயல்படுகின்றன. இந்த மையங்கள் மூலம், தற்போது 672 பேர் பயனடைந்துள்ளனர். 2023-2024ஆம் ஆண்டில், மேலும் சில மண்டலங்களில் டயாலிசிஸ் சேவையை விரிவுபடுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

**அறிவிப்பு: 2023-2024ஆம் நிதியாண்டில், ஷெனாய் நகர் மற்றும் ஆலந்தூர் ஆகிய மண்டலங்களில், தலா ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு டயாலிசிஸ் மையங்கள், முதற்கட்டமாக 10 இயந்திரங்களுடன் நிறுவப்படும்.**

**35. சென்னை மாநகரில் நெகிழிக்கு (Plastic) மாற்றாக "மஞ்சப்பை" திட்டம் கொண்டு வருதல்.**

தமிழ்நாடு அரசு, ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிக்கு எதிராக மாபெரும் தடுப்பு நடவடிக்கையை தொடங்கியுள்ளது, மேலும் இந்த பணியில் தமிழ்நாடு, முன்னணி மாநிலங்களில் ஒன்றாக உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கிற்கான தடையை தீவிரமாக அமல்படுத்தப்பட்டு வருகிறது, மேலும் 2022-23 ஆம் ஆண்டில் மொத்தம் 1.33 இலட்சம் கிலோ நெகிழிகள் பறிமுதல் செய்யப்பட்டு ரூ.3.42 கோடி அபராதம் விதிக்கப்பட்டது.

**அறிவிப்பு: ஒருமுறை பயன்படுத்தும் நெகிழி மீதான தடை அமலாக்கத்தை தீவிரப்படுத்தும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சி சோதனை அடிப்படையில் "மஞ்சப்பை" வழங்கும் திட்டம், சுயஉதவி குழுக்களுடன் இணைந்து செயல்படுத்தப்படும். பொது மக்களின் வரவேற்பு மற்றும் கருத்துகளின் அடிப்படையில் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும்.**

## திடக்கழிவு மேலாண்மை

**36. தூய்மை பணியாளர்களுக்கு புதிய வடிவமைப்புடன் சீருடைகள் வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் நலத்தினை கருத்திற்கொண்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில், தனியார் நிறுவனம் மூலம் தூய்மை பணிகளை மேற்கொள்ளும் மண்டலங்களை போலவே, பெருநகர சென்னை மாநகராட்சியால் தூய்மை பணிகளை மேற்கொள்ளும், தூய்மை பணியாளர்களுக்கும் புதிய வடிவமைப்புடன் சீருடைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியில், மண்டலங்கள் 4, 5, 6, 7 மற்றும் 8 ஆகியவற்றில் பணிபுரியும் 10,002 எண்ணிக்கையிலான தூய்மை பணியாளர்களுக்கு, ஆண்டிற்கு இரண்டு எண்ணிக்கையிலான பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இரவில் ஒளிரும் புதிய வடிவமைப்புடன் கூடிய சீருடைகள் வழங்கப்படும். இதற்காக மாநகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து ரூ.3.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**37. நெகிழிக் கழிவுகளிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் ஆலை மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத உலர் கழிவுகளை விஞ்ஞான ரீதியில் எரிக்கும் ஆலை நிறுவுதல்.**

நெகிழிக் கழிவுகளிலிருந்து எரிபொருளாக பயன்படுத்தக்கூடிய எண்ணெய் தயாரிக்கும் பணியும் (Pyrolysis Plant) மற்றும் திடக்கழிவுகளிலிருந்து பெறப்படும் மறுசுழற்சி செய்ய இயலாத உலர் கழிவுகளை, விஞ்ஞான ரீதியில் எரிக்க, எரியூட்டி (Incinerator) அமைப்பை ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது.

**அறிவிப்பு: பெருநகர சென்னை மாநகராட்சியில் நாள்தோறும் சேகரிக்கப்படும் சுமார் 20 மெட்ரிக் டன் நெகிழிக் கழிவுகளிலிருந்து எரிபொருளாக பயன்படுத்தக்கூடிய எண்ணெய் தயாரிக்கும் ஆலை (Pyrolysis Plant) மணலியில் கட்டமைக்கப்பட்டுள்ளது. மேலும், மறுசுழற்சி செய்ய இயலாத உலர் கழிவுகளை, விஞ்ஞான ரீதியில் எரிக்க 5 மெட்ரிக் டன் திறன் கொண்ட எரியூட்டி (Incinerator) ஆலை ஏற்கனவே திருவொற்றியூரில் கட்டமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ள இரண்டு பணிகளுக்கான ஆலையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெற்ற பின்னர், செயலாக்கத்திற்கு கொண்டு வரப்படும்.**

**38. ஈரமான மற்றும் உலர் கழிவுகளை காம்பாக்டர் தொட்டிகள் மூலம் தரம் பிரித்தல்.**

சென்னை மாநகரில், வீடு வீடாகச் சென்று காம்பாக்டர் தொட்டிகளில் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு, அங்கிருந்து பல்வேறு இடங்களுக்குச் செயலாக்கத்திற்கு அனுப்பப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 16,556 (GCC-4,839 / Private-11,717) காம்பாக்டர் தொட்டிகள் உள்ளன. பொது மக்கள் கழிவுகளை தரம் பிரித்து கொட்டும் செயலை மேம்படுத்துவதற்கு, ஈர கழிவுகள் மற்றும் உலர் கழிவுகள் என, தனித்தனியாக சேகரிப்பதற்காக காம்பாக்டர் தொட்டிகளில் தெளிவாக குறியீடு செய்யப்பட வேண்டியுள்ளது.

**அறிவிப்பு: 2023-24 நிதியாண்டில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வைக்கப்பட்ட அனைத்து காம்பாக்டர் தொட்டிகளிலும், ஈர கழிவுகள் மற்றும் உலர் கழிவுகள் என்ற குறியீடுகள் தெளிவாக குறிப்பிடப்படும். அதன்படி, தனித்தனியாக கழிவுகள் சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்படும்.**

**39. பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் நீண்ட காலமாக கேட்பாரற்று நிற்கும் வாகனங்களை அகற்றும் பணி.**

சென்னை போன்ற பெருநகரங்களில் தெரு ஓரங்களிலும், சாலைகளிலும் கைவிடப்பட்ட வாகனங்களால் (Abandoned Vehicles) பொதுமக்களுக்கு பெரும் இடையூறாகவும், போக்குவரத்து நெரிசலுக்கும், வழிவகுக்கிறது. மேலும், அப்பகுதி, குப்பைகளை கொட்டும் பகுதிகளாக உருவாவதால் சாலைகளை முறையாக சுத்தம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. இதனால், கைவிடப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையை கணக்கெடுத்து அடையாளம் கண்டு அவற்றினை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

**அறிவிப்பு: பெருநகர சென்னை காவல்துறை மற்றும் பெருநகர சென்னை போக்குவரத்து காவல்துறையுடன் இணைந்து, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் கைவிடப்பட்ட வாகனங்களை அப்புறப்படுத்தும் பணியும், மேலும், வாகன போக்குவரத்தினை மேம்படுத்த ஏதுவாகவும், தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.**

**40. சென்னை மாநகரில் உள்ள காலி மனைகளை சுத்தமாக பராமரிக்க மனையின் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட நகரப் பகுதியில் உள்ள பல காலி மனைகளில் குப்பைகள் / கட்டடக் கழிவுகள் போன்றவை கொட்டப்படுவதால், அவ்விடங்களில் தண்ணீர் தேங்கி கொசு உற்பத்தியாவதால் பொதுமக்களுக்கு இடையூறாக அமைகின்றது.

**அறிவிப்பு : காலிமனைகளில் குப்பைகள் / கட்டடக் கழிவுகள் கொட்டுவதால் தண்ணீர் தேக்கம் ஏற்பட்டு கொசு உற்பத்தி மற்றும் துர்நாற்றம் போன்ற காரணத்தால் அருகாமையில் உள்ள குடியிருப்பாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. இதனை தடுக்கும் வகையில் காலி மனை உரிமையாளர்களை பொறுப்பாக்கி அவற்றை சுத்தம் செய்து பராமரிக்கும் பணிக்காக, பெருநகர சென்னை மாநகராட்சியில் இதற்கான கொள்கை அளவிலான திட்டம் உருவாக்கி செயல்படுத்தப்படும்.**

**41.** **குப்பையில்லா தூய்மையான வார்டுகளை தேர்ந்தெடுத்து அங்கீகரித்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வார்டுகளை தூய்மையாக வைத்திருக்க போட்டியை உருவாக்குதல்.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டுகளை மிகவும் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் வைக்க போட்டியுணர்வை ஏற்படுத்தும் வகையில் வார்டுகளின் தூய்மை மற்றும் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளின் செயல்திறன் அடிப்படையில் வார்டுகளுக்கு தரவரிசை கட்டமைப்பை உருவாக்கி, அதனடிப்படையில் ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும் மூன்று சிறந்த வார்டுகளுக்கு ஆண்டுதோறும், பெருநகர சென்னை மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்டு வெகுமதிகள் வழங்கும் நடைமுறை ஏற்படுத்தப்படும்.**

## இயந்திரப் பொறியியல் துறை

**42.** **பெருநகர சென்னை மாநகராட்சியில், இயந்திர பொறியியல் துறையின் கீழ் பராமரிக்கப்படும் தூய்மை பணி உள்ளிட்ட இதர துறைகளின் பயன்பாட்டிற்கென பயன்படுத்தப்படும் வாகனங்களை கண்காணிக்க, வாகன மேலாண்மையை (Fleet Management) மேம்படுத்துதல்.**

**அறிவிப்பு: பெருநகர சென்னை மாநகராட்சியின் இயந்திர பொறியியல் துறையால், தூய்மை பணி உள்ளிட்ட இதர துறைகளின் பயன்பாட்டிற்கென 3,045 வாகனங்கள் பயன்படுத்தப்படுகிறது. இந்த வாகனங்களின் பயன்பாடு, பராமரிப்பு மற்றும் செயல்திறன் ஆகியவற்றினை இணையதளம் வாயிலாக கணினி மயமாக்கி Integrated Command and Control Centre (ICCC) சிறப்புற கண்காணித்து வாகன பராமரிப்பினை மேம்படுத்திட ஒருங்கிணைந்த வாகன பராமரிப்பு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படும்.**

**43. பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் வளர்ந்துள்ள மரங்களில் பொது மக்களுக்கு இடையூறாக உள்ள மரக்கிளைகளை அகற்றி சீரமைக்கவும் மற்றும் பேரிடர் நிகழ்வின்போது சாலைகளில் விழும் மரங்களை துண்டு துண்டுகளாக்கி அகற்றிடவும், மரம் அறுக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள பகுதிகளில் வளர்ந்துள்ள மரங்களில், போக்குவரத்திற்கு இடையூறாகவும், தெருவிளக்குகளை மறைத்தும் மற்றும் பொது மக்களுக்கு இடையூறாகவும் உள்ள மரக்கிளைகளை அகற்றி சீரமைக்கவும் மற்றும் பருவநிலை மாறுபாடுகளின் காரணமாக ஏற்படுகின்ற பேரிடர் நிகழ்வுகளால் முறிந்து விழும் மரங்களை அகற்றிடவும், தற்போது 6 எண்ணிக்கையிலான ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரம் அறுக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகிறது. கடந்த 2022-ஆம் ஆண்டு பருவ மழை காலத்தில் ஹைட்ராலிக் இயந்திரங்களின் செயல்திறன் மற்றும் பயன்பாடு மிகவும் பயனுள்ளதாக இருந்ததால், கூடுதலாக Tree Pruning இயந்திரம் கொள்முதல் செய்யப்பட வேண்டியுள்ளது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளில் உள்ள மரங்களில் பொது மக்களுக்கு இடையூறாக உள்ள மரக்கிளைகளை அகற்றி சீரமைக்கவும் மற்றும் பருவநிலை மாறுபாடுகளின் காரணமாக ஏற்படுகின்ற பேரிடர் நிகழ்வுகளால் முறிந்து விழும் மரங்களை அகற்றிட தற்போது 6 எண்ணிக்கையிலான ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரம் அறுக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், கூடுதலாக 3 எண்ணிக்கையில் ரூ.88.50 இலட்சம் மதிப்பீட்டில் மரம் அறுக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்து பணியில் ஈடுபடுத்தப்படும்.**

**44. கடற்கரையை சுத்தப்படுத்தும் பணிக்கென டிராக்டர் மூலம் இயக்கப்படும் கடற்கரை மணலை சலித்து சுத்தப்படுத்தும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 9, 13, 14 மற்றும் 15-க்குட்பட்ட பகுதிகளில் உள்ள உலக புகழ்பெற்ற மெரினா உட்பட இதர கடற்கரை மணற்பரப்பில் உள்ள குப்பைகள், நெகிழி கழிவுகள் (Plastic Waste), உடைந்த கண்ணாடி துண்டுகள் ஆகியவற்றினை அகற்றி சுத்தம் செய்து, கடற்கரையினை தூய்மையாக பராமரிப்பதற்கு கூடுதல் உபகரணங்கள் கொள்முதல் செய்தல் அவசியமாகிறது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கடற்கரை மணற்பரப்பில் உள்ள குப்பைகள், நெகிழி கழிவுகள் மற்றும் உடைந்த கண்ணாடி துண்டுகள் ஆகியவற்றினை அகற்றி, கடற்கரையினை சுத்தம் செய்யும் பணிக்கென ஏற்கனவே 8 எண்ணிக்கையில் டிராக்டர் மூலம் இயக்கப்படும், மணலை சலித்து சுத்தப்படுத்தும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், கூடுதலாக 2 எண்ணிக்கையில் டிராக்டர் மூலம் இயக்கப்படும் கடற்கரை மணலை சலித்து சுத்தப்படுத்தும் இயந்திரங்கள் ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**45. பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மை பணிக்கென பயன்படுத்தப்படும் வாகனங்களின் செயல் திறனை GPS கருவி பொருத்தி கண்காணித்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையின் மூலம் தூய்மை பணிக்கென பயன்படுத்தப்படும் வாகனங்களின் இயக்கத்தினை, GPS கருவியின் மூலம் கண்காணித்து அவற்றின் செயல் திறன் மேம்படுத்தப்படும்.

**அறிவிப்பு: தூய்மை பணிக்கென பயன்படுத்தப்படும் 289 எண்ணிக்கையிலான வாகனங்களின் செயல் திறனை GPS கருவியின் மூலம் கண்காணித்து அவற்றின் செயல் திறனை மேம்படுத்திட ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் GPS கருவிகள் 3 வருட காலத்திற்கு வாடகை ஒப்பந்த முறையில் பொருத்தி பராமரிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.**

**46. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சிறு ஆக்கிரமிப்புகளை அகற்றிட வாகனங்கள் கொள்முதல் செய்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள சிறு ஆக்கிரமிப்புகளை உடனுக்குடன் அகற்றிடவும் மற்றும் சாலையோரங்களில் கொட்டப்பட்டுள்ள கட்டிட இடுபாடுகளை அகற்றும் பணிகளுக்கும், சிறியவகை வாகனங்களின் தேவை அவசியமாகிறது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள சிறு ஆக்கிரமிப்புகளை உடனுக்குடன் அகற்றிடவும் மற்றும் சாலையோரங்களில் கொட்டப்பட்டுள்ள கட்டிட இடுபாடுகளை அகற்றிடவும், ஒவ்வொரு மண்டலத்திற்கு ஒரு வாகனம் வீதம் 15 எண்ணிக்கையில், காற்று மாசினை குறைத்திடும் வகையில், இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் டிப்பர் இணைந்த வகையில் சிறியவகை வாகனம் (CNG Operated Mini Truck with Tipper) ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் தூய்மை இந்தியா திட்ட (SBM) நிதியிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்படும்.**

**47. பெருநகர சென்னை மாநகராட்சியின் அச்சகத்தில், அச்சு பணிகளை துரிதப்படுத்திட புதிய உபகரணம் கொள்முதல் செய்யப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகத்தில், அச்சுப் பணிகளை உடனுக்குடனும் துரிதமாகவும் மேற்கொள்ள உயர் தொழில் நுட்பம் கொண்ட அச்சு இயந்திரம் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியின் அச்சகத்தில், அச்சகப்பணிகளை மேம்படுத்தி, துரிதமாகவும், உடனுக்குடனும் மேற்கொள்ள, High Speed Multi Function – Production Printer ஒரு எண்ணிக்கையில் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து கொள்முதல் செய்யப்படும்.**

## பேருந்து சாலைகள் துறை

**48. பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகள் சீரமைக்கும் பணி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள சாலைகள் அனைத்திலும் பொதுமக்கள் சிரமமின்றி வாகனங்களில் பயணிக்க ஏதுவாகவும், நடந்து செல்வோருக்கு வசதியாகவும், அன்றாட பயன்பாட்டினால் சேதமடைந்துள்ள பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகள், பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் சீரமைக்கப்பட்டு வருகிறது. மேலும், சாலையின் உயரம் அதிகமாகாமல் இருப்பதற்காக, சாலைகளின் மேற்பரப்புகள் அகழ்ந்தெடுத்த பின், அதிக அழுத்தத்துடன் மேற்பரப்பு ஒரே சீராக சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம், சாலைகள் சீரான மற்றும் வசதியான வாகன இயக்கத்திற்கு பயனுள்ளதாக அமைகின்றது. மேலும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், சேதமடைந்த சாலைகளை சீர்படுத்துதல் போன்ற பணிகள், தமிழ்நாடு அரசின் TURIF, Singara Chennai – 2.0, NSMT போன்ற பல்வேறு திட்ட நிதிகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அறிவிப்பு (அ) : சிங்கார சென்னை 2.0 நிதி - தமிழ்நாடு அரசின் சிங்கார சென்னை 2.0 திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளை மேம்படுத்துவதற்கும், சாலை, வடிகால், விளக்குகள், குளம் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், 2023-2024-ஆம் நிதியாண்டில், சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், 452 பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகள் 78.01 கிமீ நீளத்திற்கு ரூ.55.61 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

**அறிவிப்பு (ஆ) : தமிழ்நாடு நகர்புறசாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIF) நிதி - தமிழ்நாடு நகர்புறசாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.149.55 கோடி மதிப்பீட்டில் 251.11 கி.மீ நீளத்திற்கு 1,335 பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

**அறிவிப்பு (இ) : நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) நிதி - தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள நகர்புற சாலைகள் மேம்பட்டு திட்டத்தின் கீழ் 2023-2024-ஆம் நிதியாண்டில் சென்னை மாநகரில் 425.51 கிமீ நீளத்திற்கு 2,687 பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகள் மேம்படுத்தும் பணிகள் ரூ.327.63 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இப்புதிய சாலைத் திட்டத்தில், நடைபாதைகளில் ஆக்கிரமிப்பு மற்றும் வாகனங்களை நிறுத்துவதைத் தடுக்க, சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் கல் தூண் தடுப்புகள் அமைக்கப்படும்.**

**49. சாலைகளில் உள்ள தெருப் பெயர் பலகைகளை டிஜிட்டல் பெயர்ப் பலகைகளாக சீரமைக்கும் பணி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு மண்டலங்களில் பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகளில் உள்ள பெயர்ப்பலகைகளை (Street Name Boards) டிஜிட்டல் பெயர்ப் பலகைகளாக மாற்றம் செய்யப்படவுள்ளது.

**அறிவிப்பு : 2023-2024ம் நிதியாண்டில் 10,939 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகள் மற்றும் உட்புற சாலைகளின் உடைந்த மற்றும் பொலிவிழந்த தெருப் பெயர்ப்பலகைகளை சீரமைக்கும் பணியினை குடியிருப்போர் நலச் சங்கம், நமக்கு நாமே திட்டம் மற்றும் மாமன்ற உறுப்பினர் ஆகியோரது பங்களிப்பின் மூலம் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

## மழைநீர் வடிகால் துறை

ஒவ்வொரு ஆண்டும் பருவ மழைக் காலங்களில், சென்னை மாநகரில் வெள்ளம் மற்றும் மழைநீர் தேக்கம் ஏற்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உடனுக்குடன் சென்று தீவிர கள ஆய்வு செய்து, பருவ மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னரே சென்னையில் உள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாரி பராமரிக்கப்பட்டு, சீரமைக்கப்பட வேண்டும் என, அறிவுறுத்தப் பட்டதின்படி 2022ஆம் ஆண்டு பெய்த வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாகவே, தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டதால் சென்னை வாழ் மக்கள் வெள்ள பாதிப்பிலிருந்து மீட்கப்பட்டனர். மேலும், சென்னை வாழ் மக்களுக்கு, பருவமழை காலத்தில் ஏற்படும் இன்னல்களை குறைக்க பல்வேறு அறிவுரைகளையும் வழங்கியுள்ளார்கள்.

**50. ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைத்தல் – கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதி.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பெருநகர சென்னை மாநகராட்சியின், விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில், கொசஸ்தலையாறு வடிநில பகுதிகளில், மண்டலம்-1, 2, 3, 6 (பகுதி), 7(பகுதி) மற்றும் 8(பகுதி)யில் உள்ள இடங்களில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணி 769 கி.மீ நீளத்தில் அமைக்க, ரூ.3,220 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளவாறு, தற்போது 394 கி.மீ நிளத்தில் ரூ.1,332 கோடி செலவினத்தில் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளது.

**அறிவிப்பு : மண்டலம் – 1, 2, 3, 6 (பகுதி), 7 (பகுதி) மற்றும் 8 (பகுதி)யில் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) நிதியுதவியுடன், கொசஸ்தலையாறு வடிநில பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணி 46 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, 2023-24-ஆம் நிதியாண்டில் ரூ.1,000 கோடியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் துரிதமாக அமைக்கப்படும். இதனால், திருவொற்றியூர், மணலி, மாதவரம் அம்பத்தூர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 30 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.**

**51. KfW என்ற ஜெர்மன் நாட்டு வங்கி நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணி.**

அறிவிப்பு : கோவளம் வடிநில பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணி **KfW** என்ற ஜெர்மன் நாட்டு வங்கியின் நிதி உதவியுடன் **360** கி.மீ நீளத்திற்க்கு ரூ.**1,714** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. **M1** திட்ட கூறுகளில், நங்கநல்லூர், புழுதிவாக்கம், பெருங்குடி, மடிப்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் **12** சிப்பங்களில் **159.33** கி.மீ நிளத்திற்கு ரூ.**597.05** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக **M2** திட்ட கூறுகளில், **11** சிப்பங்களில் **122.86** கி.மீ. நீளத்திற்கு ரூ. **665.03** கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தில் ஒப்புதல் பெற்று, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் **2023-2024-**ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**52.** தமிழ்நாடு அரசின் மாநில பேரிடர் தடுப்பு **(State Disaster Mitigation Fund)** நிதியிலிருந்து மழைநீர் வடிகால் அமைக்கும் பணி.

அறிவிப்பு : தமிழ்நாடு அரசின் **2023-2024-**ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளவாறு பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட **Core City** பகுதிகளில் **2022-2023-**ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வடிகால் அமைக்கப்பட்ட இடங்களை தவிர்த்து மற்ற இடங்களில் ரூ.**232** கோடி மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி **2023-2024-**ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**53. பெருநகர சென்னை மாநகராட்சியில் மழைநீர் வடிகால்களை தூர் வாரும் பணி.**

ஆண்டு தோறும் பருவ மழைக்காலம் துவங்குவதற்கு முன்பாக, மழைநீர் வடிகால்கள் முழுவதும் தூர்வாரப்பட்டு மழைநீர் விரைந்து செல்ல வழிவகை செய்யப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மழைநீர் வடிகால்களில் படிந்துள்ள கசடுகளை அகற்றி வடிகாலில், கொசு உற்பத்தியை கட்டுப்படுத்தவும் மற்றும் பருவமழை காலங்களில் மழைநீர் தங்கு தடையின்றி செல்லவும் தூர்வாரும் பணி 2022-2023ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து மழைநீர் வடிகால்களிலும் தூர்வாரும் பணி பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து ரூ.35 கோடியும் மற்றும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைப்பின் கீழ் கொசஸ்தலையாறு வடிநில பகுதிகளில், ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) திட்ட நிதியிலிருந்தும் ரூ.20 கோடி மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் ரூ.55 கோடி மதிப்பீட்டில் 2023-2024-ஆம் நிதியாண்டில் தொடர்ந்து தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

## பூங்கா

**54. மரக்கன்றுகள் நடும் பணி.**

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் வழி ஆட்சி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பசுமை போர்வையை அதிகரிக்க, பசுமை திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2022-2023-ஆம் நிதியாண்டில் அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வலர்கள் மற்றும் சென்னை நதிகள் சீரமைப்பு திட்டத்தின் மூலமாக 2.50 இலட்சம் மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டு, இதுநாள் வரை 2.59 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேலும், சென்னை நதிகள்

சீரமைப்பு திட்டத்தின் (CRRT) மூலம் 88,356 மரக்கன்றுகளில், மணப்பாக்கத்தில் 13,456 மரக்கன்றுகளும், மதுரவாயலில் 10,100 மரக்கன்றுகளும், அடையாறு பகுதியில் 50,000 மரக்கன்றுகளும், சத்தியமூர்த்தி நகரில் (SM Nagar) 5,500 மரக்கன்றுகளும், தீவுத்திடல் திட்டு பகுதியில் 4,300 மற்றும் அம்பத்தூர் பகுதியில் 5,000 மரக்கன்றுகளும் நடப்பட்டு பசுமைமயாக்கப்பட்டு வருகிறது.

**அறிவிப்பு: 2023-2024-ஆம் நிதியாண்டிலும், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலையோரங்கள், திறந்த வெளிகள், பூங்காக்கள் ஆகிய இடங்களில் 2.50 இலட்சம் மரக்கன்றுகளை தன்னார்வலர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் நடப்படும்.**

**மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இரண்டு இடங்களில் தமிழ்நாடு நகர்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், பண்ணை (Nursery) அமைத்து, அவ்விடங்களில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து, பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக நடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

**55. பூங்கா பராமரிக்கும் பணி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திறந்த வெளி நிலங்களில் உள்ள 786 பூங்காக்களில், தத்தெடுப்பு முறையின் மூலமாக 57 பூங்காக்களும், பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலமாக 145 பூங்காக்களும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியில் 2023-2024ஆம் நிதியாண்டில் 584 பூங்காக்களை, குறைந்த செலவிலும், அதிக செயல்திறனுடனும், நல்ல நிலையில் பராமரிக்க, புதிதாக வடிவமைக்கப்பட்ட நிலையான செயல்பாட்டு நடைமுறையின்படி (Standard Operating Procedure) ஒப்பந்ததாரர் மூலம் ரூ.48 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படும்.**

**56. விளையாட்டு திடல்களை மேம்படுத்துதல், புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் தற்போது மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 427 விளையாட்டு திடல்கள் மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

**அறிவிப்பு : 2021-2022 மற்றும் 2022-2023-ஆம் நிதியாண்டில் 68 விளையாட்டு திடல்கள் மேம்படுத்தப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு வருகிறது. 2023-2024-ஆம் ஆண்டில், ரூ.500 இலட்சம் மதிப்பீட்டில் 25 விளையாட்டு திடல்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பிக்கப்படும்.**

**57. சாலை மையதடுப்புகளை பராமரித்து பசுமையாக்கும் பணி.**

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் அருளாசியுடன் சிறப்புற ஆட்சி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 104 சாலை மைய தடுப்புகளில் 2022-2023-ஆம் நிதியாண்டில் 34 சாலை மையதடுப்புகள், பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக அழகுபடுத்தி பராமரிக்கப்பட்டு வருகிறது.

**அறிவிப்பு : 2023-2024-ஆம் நிதியாண்டில் 70 எண்ணிக்கையிலான சாலை மைய தடுப்புகளை அழகுப்படுத்தி, பராமரிக்க அரசு சாரா நிறுவனங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில்** பொது-தனியார் கூட்டு **முறை (Public Private Partnership) மூலம், சாலை மைய தடுப்புகள், சாலை மைய தீவுத் திட்டு பூங்காக்கள் மற்றும் பூங்காக்களை தனியார் நிறுவனங்கள் மூலமாக பராமரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்கள், சாலை மைய தடுப்புகள், சாலை மைய தீவுத்திட்டு ஆகியவற்றுக்கு ஆகும் செலவு குறைவதுடன், அதன் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படும்.**

## கட்டடம்

**58. உயிர் நீத்தோர் உடல்களை பாதுகாக்கும் அறை அமைக்கும் பணி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் 209 மயான பூமிகள் உள்ளன. இதில் 29 மயான பூமிகள் LPG மயான பூமியாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் பல்வேறு நாடுகளில் பணிபுரிந்து வரும் சூழ்நிலையில், அவர்களின் உறவினர்களுக்கு திடீரென விபத்து மற்றும் இயற்கை மரணம் ஏற்படும் நிலையில் அயல் நாட்டில் இருந்து உற்றார், உறவினர்கள் வரும் வரையில் உயிர் நீத்தோரின் உடல்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

**அறிவிப்பு : மண்டலம்-8, வார்டு-102, அண்ணாநகர் வேலங்காடு மயான பூமியில் சுமார் ரூ.1 கோடி மதிப்பீட்டில், பொது-தனியார் கூட்டு முறையில் (Public Private Partnership) முன்னோடி திட்டமாக உயிர் நீத்தோரின் உடல்களை பாதுகாக்கும் அறை உரிய கட்டமைப்புகளுடன் அமைக்கும் பணி 2023-2024-ஆம் நிதியாண்டில் துவங்கப்படும். பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கருத்துக்களின் (Feedback) அடிப்படையில், இத்திட்டம் அடுத்து வரும் ஆண்டுகளில் மேலும் விரிவுப்படுத்தப்படும்.**

**59. புதியதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் நகர்புற சமுதாய நல மையங்கள் அமைக்கும் பணி.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்களும், 16 நகர்புற சமுதாய நல மையங்களும், 3 மகப்பேறு மருத்துவமனைகளும் மற்றும் தொற்று நோய் மருத்துவமனை மூலம் சுகாதார சேவைகளை வழங்கி வருகிறது. மேலும் இச்சேவைகளை மேம்படுத்த, மாநகர ஆரம்ப சுகாதார மையங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

**அறிவிப்பு : 2023-2024-ஆம் நிதியாண்டில் புதிய கட்டடங்களில், 11 மாநகர ஆரம்ப சுகாதார மையங்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.**

**60. நவீன மீன் அங்காடி அமைக்கும் பணி.**

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், மீன் இறைச்சிக்கூடங்களில், சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணும் வகையில் நவீன மீன் அங்காடி கட்டும் பணி விரிவுப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

**அறிவிப்பு: பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ல் சிந்தாதிரிப்பேட்டை பகுதியில், ரூ.269 இலட்சம் மதிப்பீட்டிலும், மண்டலம்-13ல் பெசன்ட் நகர் பகுதியில், ரூ.80 இலட்சம் மதிப்பீட்டிலும், 2023-2024ம் நிதியாண்டில் சிங்கார சென்னை – 2.0 திட்ட நிதி மற்றும் இதர நிதியின் வாயிலாகவும், நவீன மீன் அங்காடி அமைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.**

**61. பெரம்பூர் இறைச்சி கூடத்தை நவீனமயமாக்கும் பணி.**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–6-ல், பெரம்பூர் – புளியந்தோப்பு பகுதியில் அமைந்துள்ள இறைச்சி கூடத்தை நவீனமயமாக்கும் பணியானது நிர்வாக காரணங்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இப்பணியினை தொடர்ந்து நடைமுறைப்படுத்த சாத்திய கூறுகள் கண்டறியப்பட்டு, நவீன முறையில் மேம்படுத்தப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

**அறிவிப்பு : மண்டலம்–6-ல் பெரம்பூர் – புளியந்தோப்பு பகுதியில் உள்ள இறைச்சி கூடத்தினை நவீன முறையில் மேம்படுத்தி, தமிழ்நாடு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி பொது மக்களின் பயன்பாட்டிற்கு வெகுவிரைவில் கொண்டுவரப்படும்.**

**62. வணிக வளாகம் மற்றும் சமுதாய நல கூடங்களை மேம்படுத்தும் பணி.**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலங்களில் உள்ள வணிக வளாகம் மற்றும் சமுதாய நல கூடங்களின் கட்டடங்களில் பழுதடைந்தும், சிதிலமடைந்தும் உள்ள கட்டடங்கள் கண்டறியப்பட்டு, அக்கட்டடங்களை புனரமைத்து, புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 35 எண்ணிக்கையிலான வணிக வளாகங்கள் மற்றும் 63 எண்ணிக்கையிலான சமுதாய நல கூடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இந்த வணிக வளாகங்கள் மற்றும் சமுதாய நல கூடங்களை சிறந்த முறையில் பராமரிக்க 2023-2024-ஆம் நிதியாண்டில் சுமார் ரூ.10 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**63. மயான பூமிகளை சமப்படுத்துதல் மற்றும் அழகுப்படுத்தும் பணி.**

பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் மயான பூமிகளில் சிதிலமடைந்த சுற்றுச்சுவர் பகுதிகளையும், நடைபாதைகளையும் மற்றும் காலி இடங்களையும் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் மயான பூமிகளில் உள்ள காலி நிலங்களை பசுமையாக இருக்கும் வண்ணம் புல்வெளிகள், பூச்செடிகள் அமைத்தல் மற்றும் மயான பூமிகளின் வளாகங்களை அழகுப்படுத்திட ரூ.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**64. பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் / பணியாளர்களுக்கான நலவசதிகளை ரிப்பன் மாளிகை வளாகத்தில் உருவாக்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் அலுவலர்கள் / பணியாளர்களின் குழந்தைகளை (Infant) பராமரிக்க பகல்நேர காப்பகங்கள் அமைத்தல், தரமான உணவகம் ஏற்படுத்துதல், ஆரோக்கியம் மற்றும் புத்துணர்ச்சியுடன் பணிகளை மேற்கொள்ள உடற்பயிற்சி செய்வதற்கும் மற்றும் விளையாடுவதற்கும் ரிப்பன் மாளிகை வளாகத்தில் உரிய சூழலை ஏற்படுத்துதல்.

**அறிவிப்பு: பெருநகர சென்னை மாநகராட்சியின், தலைமையிடத்திலுள்ள அலுவலர்கள் / பணியாளர்களின் குழந்தைகளை (Infant) பராமரிக்கும் வகையில் பகல்நேர காப்பகங்கள் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும், தரமான உணவகம் ஏற்படுத்த ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரோக்கியம் மற்றும் புத்துணர்ச்சியுடன் பணியை மேற்கொள்ள உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதற்கு மற்றும் உள்விளையாட்டு (Indoor Games) கட்டமைப்பை ரூ.31 இலட்சம் மதிப்பீட்டிலும், வரும் ஆண்டில் சீரமைத்து தரப்படும்.**

## நிலம் மற்றும் உடைமைத்துறை

**65. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பு ஏதுமின்றி பாதுகாத்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி நிலங்களை ஆக்கிரமிப்புகள் ஏதுமின்றி பாதுகாத்து, அதனை பொது பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து, அவற்றை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநகரத்திலிருந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் பெயரில் உள்ள 5,786 நிலங்களின் பட்டியல்கள் பெறப்பட்டுள்ளது. இந்நிலங்களின் அளவீடு மற்றும் எல்லைகளை நிர்ணயம் செய்து (Survey and Marking Boundary) ஆக்கிரமிப்புகள் ஏதும் இருப்பின், அவற்றை அகற்றி, சுற்றிலும் வேலி அமைத்து பாதுகாக்கும் பொருட்டு தொழில் நுட்ப பிரிவுடன் (IT Cell) இணைந்து, தனியார் மூலமாக இப்பணியினை முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார பகுதிகளில் 2023-2024ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். பொதுமக்களின் கருத்துக்களின் (Feedback) அடிப்படையில், தொடர்ந்து இதர வட்டாரங்களிலும் இப்பணி செயல்படுத்தப்படும்.**

## மின்சாரம்

**66. மாமன்றக்கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒலிபெருக்கியை நவீனமயமாக்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றக்கூடத்தில் 100 எண்ணிக்கையில் உள்ள ஒலிபெருக்கி அமைப்பு, கடந்த 1996-ஆம் ஆண்டு முதல் அனலாக் முறையில் இயங்கி வருகிறது. மாமன்ற உறுப்பினர்கள் மன்றக் கூட்டத்தின் போது, பங்கேற்று பேசுவதற்கு இந்த ஒலிபெருக்கி உபயோகிக்கப்பட்டு வருகிறது. தற்போது இந்த ஒலிபெருக்கி மற்றும் அவை தொடர்புடைய கருவிகளில் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. எனவே, இந்த ஒலிபெருக்கிகளை தற்பொழுதுள்ள தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப, அனலாக் முறையிலிருந்து டிஜிட்டல் முறைக்கு மாற்றி அமைப்பது அவசியமாகும்.

**அறிவிப்பு : 2023-2024-ஆம் ஆண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றக்கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள, கலந்தாலோசனை ஒலிபெருக்கி அமைப்பை அனலாக் முறையிலிருந்து டிஜிட்டல் முறைக்கு ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் மாற்றியமைக்கப்பட்டு நவீனமயமாக்கப்படும்.**

**67. CCTV கேமரா அமைத்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குள் வரும் கூவம் மற்றும் அடையாறு ஆற்றுப் படுகையில் அமைந்துள்ள கட்டட கழிவுகள் மற்றும் தேவையற்ற கழிவுகள் கொட்டப்படுவதை கண்காணிக்கவும், மக்கள் அதிக அளவில் கூடும் பொழுது போக்கு பூங்காக்களிலும், கடற்கரை மற்றும் BOV வாகனங்கள் நிறுத்தப்படும் இடங்களில் CCTV கேமரா அமைத்து கண்காணிக்கப்படுவது அவசியமாகிறது.

**அறிவிப்பு : மெரினா கடற்கரை, அண்ணா நகர் டவர் பூங்கா, கூவம் ஆற்றுப்படுகை, அடையாறு ஆற்றுப்படுகை, BOV நிலையங்கள் மற்றும் லாரி நிலையங்களில் 2023-2024-ஆம் நிதியாண்டில் 105 எண்ணிக்கையில் CCTV கேமராக்கள் அமைக்கும் பணி ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

## தகவல் தொழில்நுட்ப மையம்

**68. சொத்துவரி சுய மதிப்பீட்டு முறை, பெயர் மாற்றம் சான்று இணைய வழி பதிவிறக்கம் செய்தல், இணைய வழி சொத்துவரி மேல்முறையீடு வசதி செய்தல்.**

2001-ஆம் ஆண்டு முதல், பெருநகர சென்னை மாநகராட்சியில் இணைய வழியாக பொதுமக்கள் செலுத்திய சொத்துவரி ரசீதினை பதிவிறக்கம் செய்து வருகின்றனர். மேலும், "குடிமக்களுக்கான இணையதள சேவை" (Citizen Portal) பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. இதன்வழியாக சொத்துக்கான விவரங்களுடன் சொத்துவரி மதிப்பீட்டிற்கு, விண்ணப்பம் செய்வதை கொண்டு, வருவாய்துறையின் அலுவலர்களால் வரி மதிப்பீடு செய்து வழங்கும் முறை நடைமுறையில் உள்ளது. மேலும், வரி நிலுவை, வரி செலுத்துதல், கட்டட அனுமதி நிலை அறிதல், போன்ற பல்வேறு சேவைகளை அளித்து வருகிறது. 2023-2024-ஆம் ஆண்டில் மேலும் பொதுமக்களுக்கு இணையவழி தளத்தில் பல வசதிகள் செய்யப்பட உள்ளது.

**அறிவிப்பு (அ) : "சொத்துவரி பெயர் மாற்றம் சான்று" பதிவிறக்கம் செய்து கொள்ள இணைய வழி வசதி அறிமுகப்படுத்தப்படும்.**

**அறிவிப்பு (ஆ) : பொதுமக்கள் நலன் கருதி, சொத்துவரி மேல்முறையீட்டினை இணையதளம் வழி நடைமுறைபடுத்த வழிவகை செய்யப்படும்.**

**69. வயது முதிர்ந்தோர் வரி செலுத்த இணையதள முன்புதிவு முறை.**

தற்போது, பொதுமக்கள் தங்கள் சொத்துவரிகளை, வரி செலுத்தும் மையங்களில் அல்லது வங்கிகளில் சென்று செலுத்திடலாம். மேலும், இதனை விட எளிமையாக, இணையதள ஆன்லைனில் செலுத்தும் முறையும் உள்ளது. இவை தவிர, சொத்துவரி செலுத்துவதில் வயது முதிர்ந்தோருக்கு மேலும் வசதி செய்யப்படும்.

**அறிவிப்பு : வயது முதிர்ந்தோர் தங்களது சொத்துவரியினை எவ்வித சிரமமுமின்றி எளிதாக செலுத்த ஏதுவாக இணையதளம், நம்ம சென்னை செயலி மற்றும் 1913 வாயிலாக முன்பதிவு முறை அறிமுகப்படுத்தப்படும். மேலும், இதன் மூலம் வருவாய் துறை அலுவலர்கள், முன்பதிவு செய்யப்பட்டோரின் இல்லம் சென்று நேரில் சொத்துவரி வசூலிக்கும் முறை 2023-2024-ஆம் நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்படும்.**

**70. சமூக நல கூடங்கள், வணிக வளாகங்களுக்கு முன்பதிவு முறை.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சமூக நல கூடங்களின் முன்பதிவிற்கு விவரம் அறிய, இணையதள சேவை பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. சமூக நல கூடங்கள், வணிக வளாகங்களின் விவரம் அறிவது மட்டுமின்றி, முன்பதிவினையும் எளிதாக்க, இணையதளம் மூலம் முன்பதிவிற்கும் வழிவகை செய்யலாம்.

**அறிவிப்பு : பொதுமக்கள், 2023-2024-ஆம் நிதியாண்டு முதல் சமூக நல கூடங்கள், வணிக வளாகங்களை பயன்படுத்திட, இணையவழி வாயிலாக முன்பதிவு மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

**71. கட்டட அனுமதி தரவுகள் (DATA) சொத்துவரி மென் பொருளுக்கு பரிமாற்றம் செய்து, சொத்துவரி மதிப்பீடு செய்தல்.**

கட்டட அனுமதி பெறுவதற்கு, “குடிமக்களுக்கான இணையதள சேவை (CITIZEN PORTAL)” மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பித்து, இதற்கான விண்ணப்ப கட்டணம் முதலானவை ஆன்லைனில் செலுத்தி வருகின்றனர். இச்சேவை வழியே அலுவலர்கள் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, கட்டட அனுமதிக்கான விவரங்களை பரிசீலித்து, கட்டட அனுமதி வழங்கும் பணியை செய்து வருகின்றனர். கட்டட அனுமதிக்கு மென்பொருள் வழி பெறப்படுகின்ற தரவுகள் (DATA) அனைத்தையும் சொத்துவரி மென்பொருளுக்கு கணினி வழி பரிமாற்றம் செய்யப்படின், வருவாய் அலுவலர்கள் மிகவும் எளிதாக அத்தரவுகளை பயன்படுத்தி காலதாமதமின்றி சொத்துவரி மதிப்பீடு செய்வதற்கு வசதியாக இருக்கும்.

**அறிவிப்பு : 2023-2024-ஆம் ஆண்டில், நகரமைப்பு பிரிவின் கட்டட அனுமதி மென்பொருளில், பொதுமக்கள் பதிவு செய்த விண்ணப்பத்தின் விவர தரவுகளை(DATA), வருவாய்த் துறை மென்பொருளுக்கு பரிமாற்றம் செய்து, வருவாய் அலுவலர்கள் சொத்துவரி மதிப்பீடுகளை விரைவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்**

**72. வரி வருவாய் மற்றும் புவியியல் தரவு தளத்தை எளிதாக்குதல்.**

உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட "சொத்து மற்றும் பயன்பாடு" சம்பந்தமான 200 வார்டுகளுக்கான வரைபடம் தயாரிக்கும் திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சியால் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், மதிப்பீடு செய்யப்படாத கட்டடங்கள் மற்றும் அளவு குறைவாக மதிப்பீடு செய்யப்பட்ட கட்டடங்கள், ஒப்பந்ததாரர் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இப்பணியானது மார்ச் 2023-ஆம் ஆண்டு முடியும் நிலையில் உள்ளது. மேலும் வருவாய் மற்றும் புவியியல் தரவு தளம் மேம்படுத்தப்படும்.

**அறிவிப்பு : வரி வருவாய் மற்றும் புவியியல் தரவு தளத்தை எளிதாக்கும் பொருட்டு, 2023-2024-ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு மாநில புதுமை முயற்சிகள் (TANII) திட்டத்தின் வாயிலாக ரூ.8.28 கோடி செலவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் புவியியல் தகவல் தொழில் நுட்பப்பிரிவில் புதிய தொழில்நுட்பப் பணியாளர்கள் நியமனம் செய்து வலுப்படுத்தப்படும்.**

**73. ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் வழி மூலம் பொதுமக்கள் ஈடுபாடு தளம் (Citizen Engagement Platform) உருவாக்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், பொதுமக்கள் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு விண்ணப்பிப்பதற்கு வசதியாக, ஏற்கனவே பல்வேறு செயலிகள் பயன்பாட்டில் உள்ளதை, மேலும் நவீன தொழில்நுட்பம் மூலம் மேம்படுத்தப்படின், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு எளிதாக இருக்கும் வகையில் அமைக்கலாம்.

**அறிவிப்பு : ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் மூலம் 1913, முகநூல், டிவிட்டர், வாட்ஸ்அப், இணையதளம், நம்ம சென்னை செயலி போன்ற தளங்கள் அனைத்தையும் ஒரே தளத்தில் இயக்குவதற்கு, பொதுமக்கள் ஈடுபாடு தளம் (Citizen Engagement Platform) 2023-2024-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படும். நம்ம சென்னை செயலி ஆண்ட்ராய்டு (Android) கைபேசியில் மட்டுமல்லாது, ஐ.ஓ.எஸ் (IOS) கைப்பேசியிலும் இயங்கும் வகையில் நவீன தொழில்நுட்பம் கொண்டு மேம்படுத்தப்படும்.**

## நமக்கு நாமே திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நகர்புற பகுதிகளின் வளர்ச்சிக்காக "நமக்கு நாமே" திட்டத்தை உருவாக்கி அனைத்து மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் செயல்படுத்தப்படும் என அறிவித்துள்ளார்கள். நமக்கு நாமே திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சுமார் ரூ.49.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 352 பணிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, 251 பணிகள் முடிக்கப்பட்டு, 88 பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கீழ்கண்ட முக்கியமான பணிகள் 2023-2024-ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**74. அறிவிப்பு : அண்ணா சாலையில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் Capital and Hope Foundation India என்ற நிறுவனத்தின் ரூ.3.13 கோடி பங்களிப்புடன் ரூ.6.26 கோடியில் மாதிரிப் பள்ளி கட்டடம் கட்டும் பணி 2023-2024-ஆம் ஆண்டில் நடைபெற உள்ளது. இம்மாதிரிப்பள்ளியில் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளியின் மாணாக்கர்களும் படிக்க உள்ளார்கள்.**

**75. அறிவிப்பு : சென்னை எழும்பூரில் உள்ள மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ நிறுவனம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான அரசு மருத்துவமனையில், Incubator-ல் வைத்து பாதுகாக்கப்படும் குழந்தைகளின் தாய்மார்களை தங்க வைத்தும், அவர்களுக்கு உணவு**

கொடுப்பதற்காகவும், **100** படுக்கைகள் மற்றும் உணவகத்துடன் கூடிய கட்டடம் கட்டும் பணி கலைஞர் நினைவு சர்வதேச மாரத்தான் நிறுவனத்தின் ரூ.**1.20** கோடி பங்களிப்புடனும், தமிழக அரசின் பங்களிப்பாக நமக்கு நாமே திட்டத்தின் மூலம் ரூ.**2.30** கோடியும், தேசிய நகர்புற வாழ்வாதாரப் பணி நிதியிலிருந்து ரூ.**2.39** கோடியும், ஆகமொத்தம் ரூ.**5.89** கோடி மதிப்பீட்டில் **2023-2024-**ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**76.** அறிவிப்பு : சென்னை கொரட்டூரில் சாவடி சாலையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி, சாரதா நகரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் பாடியில் மூர்த்தி நகரில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில், லெஜன்ட் சரவணா ஸ்டோர்ஸ்-ன் ரூ.**1.50** கோடி பங்களிப்புடன் ரூ.**4.50** கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் **2023-2024-**ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**77.** அறிவிப்பு : சென்னை விருகம்பாக்கத்தில், பள்ளி சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப்பள்ளி, கொடுங்கையூரில் காமராஜர் சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி மற்றும் கொளத்தூர் மடுமா நகரில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் **Repco Home Finance Ltd-**ன் ரூ.**1.01** கோடி பங்களிப்புடன், ரூ.**3.03** கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் **2023-2024**ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**78.** அறிவிப்பு : மண்டலம்-**3**, கோட்டம்-**24**-ல் புழலில் உள்ள நகர்புற குழந்தைகள் சுகாதார மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள், **Punjab National Bank-**ன் பங்களிப்புடன் ரூ.**75** இலட்சம் மதிப்பீட்டில் **2023-2024**ஆம் நிதியாண்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

# பொது

**79. பெருநகர சென்னை மாநகராட்சி மக்களின் குறைகளை கண்டறிந்து அவற்றின் மீது தீர்வு காண "மக்களை தேடி மேயர்" என்ற திட்டம் அறிமுகப்படுத்துதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது மக்கள் குறை தீர்ப்பு அமைப்பு (Public Grievance Redressal System) வாயிலாக தற்போது கீழ்காணும் முறைகளில் தீர்வு காணப்பட்டு வருகிறது:-

- 1913 அழைப்பு மையம் மூலமாக பொது மக்களிடம் புகார்கள் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி, அப்புகார்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- நம்ம சென்னை செயலி (Namma Chennai Mobile App) மூலமாக பொது மக்களிடம் புகார்கள் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி அப்புகார்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- தபால்கள் மூலம் ஆணையர் அலுவலகம் / வட்டார அலுவலகங்கள் / மண்டல அலுவலங்களிலும், பொது மக்களிடம் பெறப்படும் மனுக்கள் மீதும் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**அறிவிப்பு : மாண்புமிகு மேயர் அவர்களிடம் மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள பொது மக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்களின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து குறைகள் களையும் பொருட்டு, மாண்புமிகு மேயர் அவர்கள் மாதத்திற்கு ஒரு முறை, ஏதேனும் ஒரு வட்டார அலுவலகத்தில், மனுக்களை நேரடியாக பெறும் வகையில் "மக்களை தேடி மேயர்" திட்டம் 2023 – 2024-ஆம் நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படும்.**

## வாகன நிறுத்தக் குழுமம்

**80. சென்னையில் சிறப்பான வாகன நிறுத்த நடைமுறையை மேம்படுத்துதல்.**

பெருநகர சென்னை பகுதிகளில் வாகனங்களை நிறுத்துவதற்கான இடப்பற்றாக்குறை மிகப்பெரும் சிக்கலாக உள்ளது. இதற்கு தீர்வு செய்யும் பொருட்டு, போக்குவரத்து காவல்துறை, திட்டமிடல் ஆணையம், சென்னை பெருநகர மேம்பாட்டு ஆணையம் (CMDA) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றின் கூட்டு முயற்சி மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவைப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் இது தொடர்பான திட்டமிடல் மற்றும் பொறியியல் கண்ணோட்டத்தில் வாகன நிறுத்தம் மற்றும் போக்குவரத்து தொடர்பான பிரச்சனைகளை சமாளிக்க தற்போது, தனியாக எந்த ஒரு அமைப்பும் இல்லை.

பெருநகர சென்னை மாநகராட்சியில் On-Street Parking திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சியின் சிறப்புத் திட்டங்கள் துறையாலும் மற்றும் வருவாய் சேகரிப்பு (Revenue Collection) வருவாய்த் துறையாலும் கண்காணிக்கப்படுகிறது.

**அறிவிப்பு (அ) : 2023 – 2024-ஆம் நிதியாண்டில் வாகன நிறுத்த நடைமுறை அமைப்பில் உள்ள சிக்கலை தீர்க்க, பெருநகர சென்னை மாநகராட்சியில் கீழ்கண்டுள்ளவாறு அலுவலர்கள் அடங்கிய ஒரு பிரத்யேகமான வாகன நிறுத்தம் மற்றும் போக்குவரத்து மேலாண்மை குழுமம் என்ற பிரிவு ஏற்படுத்தப்படும். இக்குழு வாகன நிறுத்தம் மற்றும் போக்குவரத்து மேலாண்மை தொடர்பான பல்வேறு பணிகளை மேற்கொள்ளும்.**

1. **தலைமைப் பொறியாளர் (திட்டமிடல்)**
2. **கண்காணிப்பு பொறியாளர் (சிறப்பு திட்டங்கள் துறை)**
3. **கண்காணிப்பு பொறியாளர் (பேருந்து சாலைகள் துறை)**
4. **கூடுதல் வருவாய் அலுவலர்**
5. **செயற்பொறியாளர் (வாகன நிறுத்தம் மற்றும் போக்குவரத்து)**

**6.** **உதவி வருவாய் அலுவலர் (தலைமையிடம் - வாகன நிறுத்தம்)**

**7.** **உதவி செயற்பொறியாளர் (வாகன நிறுத்தம் மற்றும் போக்குவரத்து**

**8.** **மூன்று உதவி செயற்பொறியாளர்கள் (இப்பணிக்கான செயல்பாடுகளை செயற்படுத்துவதற்காக)**

**அறிவிப்பு (ஆ) : பெருநகர சென்னை மாநகராட்சியில் முக்கிய வணிகப் பகுதிகளில் உள்ள சாலை ஓரங்களில் வாகன நிறுத்த மேலாண்மையை, முன்னதாக தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் லிமிடெட் (TEXCO) மூலம் நிர்வகிக்கப்பட்டது. பின்னர் 2017-18 ஆம் ஆண்டில் வருவாய் பகிர்வு அடிப்படையில், பொது தனியார் கூட்டு முறையில், தெரு வாகன நிறுத்த மேலாண்மையை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, இதன் மூலம் தினசரி ரூ.5,000/-த்திலிருந்து கிட்டத்தட்ட ரூ.1.20 இலட்சமாக வருவாய் ஈட்டப்பட்டது. தற்போது தனியார் நிறுவனத்தால் 8, 9 & 10 ஆகிய மண்டலங்களில் சுமார் 5,000 வாகனங்கள் மேலாண்மை செய்யப்படுகிறது. வருவாயை மேலும் ஈட்டுவதற்கும், சாலை ஓரங்களில் வாகன நிறுத்த மேலாண்மையை, மேலும் மேம்படுத்தும் வகையில், 2023-2024ஆம் நிதியாண்டில் மீதமுள்ள மண்டலங்களிலும் பொது-தனியார் கூட்டு (PPP) முறையில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.**

## மன்றத்துறை

**82. மாமன்ற உறுப்பினர் குடும்ப பாதுகாப்பு நிதியினை உயர்த்தி வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுடன் செயல்பட்டு வரும் மக்கள் பிரதிநிதித்துவ மன்றங்களின் பிரதிநிதிகள் அனைவரும் மக்கள் நலப்பணிகள், அடிப்படை வசதிகள், உள்கட்டமைப்பு வசதிகள் போன்ற பணிகளை செம்மையாகச் செயல்படுத்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளார்கள். அவ்வாறு ஏற்படுத்தப்படும் உள்கட்டமைப்புகளை பராமரிப்பதிலும், தங்களை முழுமையாக ஈடுபடுத்தி வருவதோடு பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள்,

பயனுள்ளவாறு அமையும் வகையில் திட்டமிடுவதிலும், செயல்படுத்துவதிலும் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி வருகின்றனர். அது மட்டுமின்றி, இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் மழை, புயல், வெள்ளம், தீ விபத்து மற்றும் பேரிடர் காலங்களிலும், இரவு பகல் பாராமல் தங்களை மக்கள் நலப்பணியில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு பல்வேறு பணிகளை போர்க்கால அடிப்படையில் சிறப்பாக செய்து வருகிறார்கள். அவ்வாறு முழுநேர மக்கள் நலப்பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு பணியாற்றி வரும் மாமன்ற உறுப்பினர்கள், எதிர்பாரா விதமாக மறைவெய்தும் போது அவர்களின் குடும்பத்தின் நிலையினை கருத்தில் கொண்டு, மறைவெய்திய மாமன்ற உறுப்பினர் குடும்பத்திற்கு தற்போது குடும்ப பாதுகாப்பு நிதி ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

**அறிவிப்பு : 2023 – 2024-ஆம் நிதியாண்டு முதல் மாமன்ற உறுப்பினராக பதவி வகிக்கும் காலத்தில் மறைவெய்தும் உறுப்பினர்களுக்கு, மாமன்ற உறுப்பினர் குடும்ப பாதுகாப்பு நிதி, ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் மூன்று இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.**

## 83. மாமன்ற உறுப்பினர்களுக்கு வார்டு மேம்பாட்டு நிதியை உயர்த்தி வழங்குதல்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 200 வார்டுகளில் உள்ள மக்களின் முக்கிய கோரிக்கைகள் மற்றும் தேவைகள் குறித்து மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிந்திருக்கின்றார்கள். பொது மக்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து, அவர்களின் கோரிக்கைகளை, விரைந்து நிறைவேற்றும் வகையில், ஒவ்வொரு வார்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு வார்டு மேம்பாட்டு நிதி வழங்கப் படுகிறது. 2022-2023-ஆம் நிதியாண்டில் இந்த நிதி ரூ.30 இலட்சத்திலிருந்து ரூ.35 இலட்சமாக உயர்த்தப்பட்ட நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதிநிலை இன்னும் சீரடையாத நிலையில், அதன் கடன் சுமை மற்றும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பல கடமைகளும் நிலுவையில் உள்ளது. இருந்தபோதிலும்,

அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், உள்ளூர் பொதுமக்களிடமிருந்து நாள்தோறும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது மாமன்ற உறுப்பினர்களின் கடமையாகும். இதன் பொருட்டு, மாமன்ற உறுப்பினர்களின் மேம்பாட்டு நிதியை மீண்டும் உயர்த்தி வழங்க வேண்டியது அவசியமாகிறது. **இந்நிதியிலிருந்து முன்னுரிமையின் அடிப்படையில் சில திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பாக உரிய வழிகாட்டு நெறிமுறைகள் தனியே வெளியிடப்படும்.**

**அறிவிப்பு : 2023 – 2024-ஆம் நிதியாண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பட்டு நிதியானது ரூ.35 இலட்சத்திலிருந்து ரூ.40 இலட்சமாக உயர்த்தப்படும்.**

**நன்றி, வணக்கம்.**